சிற்றூர்கள் உள்ளன. இவ்வூராட்சியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட படித்த, படிக்கின்ற இளைஞர்கள் உள்ளனர். இவர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காகவும், இவர்களுடைய பொழுதுபோக்கிற்காகவும் விளையாட்டுத் திடல் ஒன்று அமைத்துத்தர வேண்டுமாயும், அவர்களுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்கிட வேண்டுமாயும் கேட்டுக்கொள்வதுடன், இவ்வாண்டு முடியாவிட்டாலும்கூட விளையாட்டுத் துறையை ஊக்குவித்துவரும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அடுத்த ஆண்டாவது செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு அம்மாவின் அரசு கனிவுடன் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எ.வ. வேலு.

திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையைப் பொறுத்த அளவிற்கு இந்த அரசு ஊக்குவிக்கும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். Youth Affairs என்று மத்திய அரசாங்கத்திலே இருக்கின்ற அமைச்சகத் துறை நம்முடைய தமிழ்நாட்டிலே கட்டப்படுகின்ற அதுவும் குறிப்பாக அறக்கட்டளைகள் மூலமாகக் கட்டப்படுகின்ற உள் விளையாட்டு அரங்கத்திற்கு பாதி அளவிற்கு, அதாவது 50 சதவிகிதம் மானியம் வழங்குகிறார்கள். எனவே, இந்த அரசு இதுபோன்ற உள் கட்டமைப்புக்கு, அதாவது Indoor Stadium கட்டுவதற்கு அரசு மானியம் வழங்குவதற்கு முன் வருமா? அப்படி வழங்கும் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் 50 சதவீதம் அளவிலே, 1 கோடி ரூபாய் என்று சொன்னால், 50 இலட்சம் ரூபாய் அவர்கள் வழங்குகிறார்கள். எனவே, மாநில அரசு அதிலே தன்னுடைய பங்கை வழங்குமா அல்லது முழுமையாக அந்த நிதியை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் பங்களிப்புத் தொகையாக 25 சதவிகிதமும், தமிழக அரசு சார்பாக 25 சதவிகிதமும், இவை இரண்டும் செலவு செய்யப்பட்ட பின்னரே, மத்திய அரசிடமிருந்து 50 சதவிகிதம் வழங்கப்படுகிறது.

2004 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி டி. யசோதா.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் Sports University ஆரம்பிப்பதாக அங்கிருக்கின்ற அதிகாரிகள் பேசிக்கொள்கிறார்கள். அப்படி அரசுக்கு ஏதேனும் எண்ணம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கு அப்படி ஏதும் எண்ணம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்திலே மாவட்ட விளையாட்டுத் திடல் அமைப்பதாக அறிவித்து ஓராண்டு காலம் ஆகிறது. ஆனால், அதற்கான எந்த ஒரு பூர்வாங்கப் பணியும் துவங்கப்படாமல் இருக்கிறது. அந்த மாவட்ட விளையாட்டுத் திடலை விரைவில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இன்பத்தமிழன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குண்டான முயற்சியில் அரசு ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

31—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மேம்பாலம்

*** 6593—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தானிலிருந்து ஆண்டிப்பட்டி பங்களாவிற்குச் செல்லும் பாதையின் குறுக்கே இரயில் இருப்புப் பாதையின் மீது மேம்பாலம் ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

முற்பகல் 10-50

திரு. வி.ஆர். ராஜாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சென்று தங்களது தொகுதியான திருமங்கலம் வழியாக, திருநெல்வேலி, தூத்துக்குடி செல்லும் வாகனங்கள் வாடிப்பட்டி, ஆண்டிப்பட்டி, சோழவந்தான் வழியாகச் செல்லும்போது குறைந்தது 40 கிலோ மீட்டர் மிச்சப்படுகிறது. இப்போது மத்திய அரசு வாரா வாரம் ஏற்றுகின்ற டீசல் விலையிலிருந்து தப்பிப்பதற்கு சோழவந்தான் அருகில் ஒரு மேம்பாலம், இரயில்வே மேம்பாலம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மறுபரிசீலனை செய்து கட்டினால் மக்களுக்கும், வாகன ஓட்டுநர்களுக்கும், அந்தப் பகுதி மக்களுக்கும் மிக உதவியாக இருக்கும் என்பதைக் கூறி, அரசு விரைவில் மறுபரிசீலனை செய்து இரயில்வே மேம்பாலம் கட்டித் தருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு கோரப்பட்டுள்ள இடம் சோழவந்தான்-ஆண்டிப்பட்டி சாலையில் கிலோ மீட்டர் 0/2 ஆகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் தற்போதுள்ள போக்குவரத்துச் செறிவு எண்ணிக்கை 1,028 ஆகும். இந்த இரயில்வே தடத்தில் செல்லும் இரயில்களுக்காக ஒரு நாளைக்கு 22 தடவை இரயில்வே கடவு மூடப்படுகிறது. ஆக, இரயில்வே போக்குவரத்துச் செறிவு 22,616 ஆகும். விதிகளின்படி இரயில்வே கடவு இருக்கின்ற சாலையில் இரயில்வே மேம்பாலம் அமைக்கப்பட வேண்டுமானால் இரயில்வே போக்குவரத்துச் செறிவு ஒரு இலட்சமாக இருக்க வேண்டும். இவ்வினாவில் குறிப்பிட்டுள்ள இரயில்வே கடவினுடைய இரயில்வே போக்குவரத்துச் செறிவு விதிமுறைகளின்படி குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இந்த இடத்தில் இரயில்வே மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.